முன்னிலை: திரு.சதாம்உசைன், B.A.,L.L.B.,
(மு.கூ.பொ) குற்றவியல் நீதித்துறை நடுவர், ஓமலூர்.
சி.சி.எண். 100/2024

அ.சா.5

2026–ம் ஆண்டு ஜூலை 21–ம் தேதி செவ்வாய்க்கிழமை அரசு தரப்பு சாட்சி –5 வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திருமதி.மோகனபிரியா என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | கார்த்திக் | தொழில் | |
| தந்தை பெயர் | பெருமாள் | வயது | |
| கிராமம் | | தாலுக்கா | |

விசாரணை தொடங்கிய நேரம்: மதியம் 01.35 மணி,

Accused A1)Sanjay, A2)Arunkumar, A3)Mathiyalagan are present. Advocate Mrs.Arunadevi present for all accused. APP Mr.M.Suresh present.

**முதல் விசாரணை :**

1. நான் நங்கவள்ளியில் குடியிருந்து தொளசம்பட்டியில் போட்டோ ஸ்டுடியோ வைத்து நடத்தி வருகிறேன். அ.சா.1 மற்றும் அ.சா.2 ஐ தெரியும். ஆஜர் எதிரிகளைத் தெரியும். கடந்த 27.08.2023 ஆம் தேதி மாலை 06.00 மணியளவில் நான் பிரேம் வாங்குவதற்காக 5 வது மைல் வழியாக சிந்தாமணியூர் செல்ல இருசக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்தேன். அப்போது ஞானசேகரனும், அவரது மனைவி கீதா ஆகியோர் ஏரி சர்ச் அருகே இருசக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்தார்கள். அப்போது ஆஜர் எதிரிகள் இருசக்கர வாகனத்தில் அவர்களை உரசுவது போல் சென்றார்கள். ஆஜர் எதிரிகள் மது குடித்திருந்தது போல் தெரிந்தது. அப்போது ஞானசேகரன் அவர்களை பார்த்து டேய் என்று சத்தம்போட்டார். அப்போது எதிரிகள் மூவரும் ஞானசேகரனை பார்த்து தேவிடியாக பையா என்று திட்டினார்கள். பின்பு அங்கிருந்து கிளம்பிவிட்டார்கள்.

2. அதன்பின்பு ஒரு வாரம் கழித்து காவல்நிலையத்தில் இருந்து என்னை அழைத்தார்கள். நான் சம்பவத்தை பார்த்த விபரங்களை சொன்னேன். தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரி 2–ல் உள்ள 2 வது கையெழுத்து என்னுடையது. ( **அந்த கையெழுத்து அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**)

SADHAMHUSAIN S
Digitally signed by SADHAMHUSAIN S
Date: 2026.07.21 17:37:18 +0530

மேற்படி கையெழுத்தை நான் காவல்நிலையத்தில் வைத்து போட்டேன். சம்பவம் குறித்து நேரடியாக பார்த்ததற்காக மேற்படி சாட்சி கையெழுத்தை போட்டேன்.

**(அரசு தரப்பு சாட்சி பார்வை மகஜ பொறுத்தமட்டில் பிறழ்சாட்சியாக கருதி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்க கேட்டதின் பேரில் அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்)**

போலீசார் என்னை விசாரித்தார்கள் என்றும், அந்த விசாரணையில் கடந்த 07.09.2023 ஆம் தேதி 17.00 மணியளவில் போலீசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்த போது நான் சாட்சியாக உடனிருந்து சம்பவ இடத்தில் வைத்து பார்வை மகஜரில் சாட்சி கையெழுத்து போட்டுவிட்டு தற்போது காவல் நிலையத்தில் வைத்து கையெழுத்து போட்டதாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

கற்றறிந்த எதிரிகள் தரப்பு வழக்கறிஞரால் மனுதாக்கல் செய்யப்பட்டு, அம்மனு அனுமதிக்கப்பட்டு குறுக்கு விசாரணை வேறு ஒரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.

**விசாரணை முடிந்த நேரம் : மதியம் 01.45 மணி.**

SADHAMHUSAIN S

Digitally signed by SADHAMHUSAIN S
Date: 2026.07.21 17:37:21 +0530